**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.03.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 28.03.2018 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

( 1 ) இந்நகராட்சிக்கு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 42.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட நிர்வாக செயலாளர், மாவட்ட நல வாழ்வு சங்கம், நாமக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1509/பி4/2016 நாள் 19.3.2018–இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் மாவட்ட நல வாழ்வு சங்கம் அளித்துள்ள கட்டிட கட்டுமான வரைபடத்தில் உள்ளபடி 2017–2018–ஆம் ஆண்டு செந்தார விலைப்பட்டியல்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் திட்ட மதிப்பீடு ரூ. 49.50 இலட்சமாகும். மேற்படி ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்ட ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மான்யம் ரூ. 42.00 இலட்சம் போக கூடுதல் செலவினம் ரூ. 7.50 லட்சத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/197/18)

**தீர்மானம் எண். 279**

அனுமதிக்கப்பட்டது

( 2 ) புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா, நாமக்கல் மாவட்டத்தில் நடைபெறுவதை முன்னிட்டு இந்நகராட்சிக்குட்பட்ட சத்துணவு மையங்களின் சமையல் கூடங்களுக்கு வெள்ளை அடித்து சுத்தமாக வைத்திருக்க மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண். 19469/2017/சஉதி3 நாள் 1.8.2017–இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி சத்துணவு கூடங்களுக்கு வெள்ளை அடிக்கவும் இதர சிறு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும் மதிப்பீடு ரூ. 70000/– செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(சி4/2248/17)

**தீர்மானம் எண். 280**

அனுமதிக்கப்பட்டது

(3) இந்நகராட்சிக்கு புதியதாக அலுவலக கட்டிட பயன்பாட்டிற்கு கட்டப்பட்ட கட்டிடத்தில் ஆணையர் அறை மற்றும் நகர்மன்றத் தலைவர் அறை முன்புற கதவுகள் மாற்றவும் மேற்படி அறைகளுக்கு டேபிள் சேர் வாங்கவும் பார்வையாளர்களுக்கு நாற்காளிகள் வாங்கவும், சேவை மையம் மற்றும் வரிவசூல் மையம் ஆகியவைகளுக்கு தனித்தனியாக கவுண்ட்டர் அமைக்கவும், சர்வர் அறையில் உதவி கணினி திட்ட அமைப்பாளர் அவர்களுக்கு டேபிள் சேர் 5 கணினி மேசைகள் அமைக்கவும் மேலும் இளநிலை பொறியாளர், நகரமைப்பு ஆய்வர், நகர சார் ஆய்வர் ஆகியோர்களுக்கு மேசை நாற்காலிகள் வாங்கவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 995000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேலும் பணியின் அவசர அவசியம் கருதி அரசு சார்பு நிறுவனமான சேலம் மாவட்ட சர்வோதயா சங்கம், ஆத்தூர் அவர்களிடமிருந்து பெறவும்அதற்குண்டான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/537/18)

**தீர்மானம் எண். 281**

அனுமதிக்கப்பட்டது

(4) இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு என புதியதாக கட்டப்பட்ட கட்டிடத்தில் அமைக்கப்பட்ட சேவை மையம் மற்றும் வரிவசூல் மையத்திற்கும் இடையே தடுப்பு அலுமினியத்தால் அமைத்தும், பொதுப்பிரிவு அனைத்து எழுத்தர்கள் மற்றும் வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு ஆகியவற்றில் உள்ள எழுத்தர்கள், மேலும் வருவாய் ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வர், நகரசார் ஆய்வர் போன்ற அலுவலர்களுக்கு ஏற்கனவே உள்ள மேஜை நாற்காலிகள் மிகவும் பழுதடைந்து அதனை மராமத்து செய்ய இயலாத நிலையில் உள்ளதாலும், மேலும், புதிய கட்டிடத்தில் புதியதாக மேஜை நாற்காலிகள் போட வேண்டி உள்ளதால் 26 எண்ணிக்கை மேஜை மற்றும் 24 எண்ணிக்கை “S” type நாற்காலிகள் வாங்க உத்தேச செலவினம் ரூ. 960000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேலும் பணியின் அவசர அவசியம் கருதி அரசு சார்பு நிறுவனமான சேலம் மாவட்ட சர்வோதயா சங்கம், ஆத்தூர் அவர்களிடமிருந்து பெறவும்அதற்குண்டான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/531/18)

**தீர்மானம் எண். 282**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ப. கிருஷ்ணமூர்த்தி
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி